**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.4825/ஆ5/2025, நாள்.09.10.2025**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – 2025–2026ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் மாவட்ட அளவில் 11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் பள்ளி மாணாக்கர்களுக்கான கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல் – மாணாக்கர்களை போட்டியில் பங்கேற்க செய்தல் – தொடர்பாக

பார்வை
1. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ. 1.1)த் துறை அரசாணை (ப) எண். 52, நாள். 10/03/2025
2. வேலூர் மாவட்டம், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநரின் கடித ந.க.எண்.601/2025, நாள். 22.09.2025

•••••

பார்வை 2–ல் காணும் கடிதத்திற்கிணங்க 2025–2026ம் ஆண்டில் தமிழ் வளர்ச்சி துறை சார்பில் பள்ளி மாணாக்கர்களிடையே பேச்சாற்றலையும், படைப்பாற்றலையும் வளர்க்கும் நோக்கில் அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் (அரசு / தனியார் / நிதியுதவி) 11 மற்றும் 12ம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் கீழ்காணும்படி நடைபெறவுள்ளது.

**நாள்– 14.10.2025 (செவ்வாய்கிழமை)**
**நேரம் – காலை 9.30 மணி**
**இடம் – முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, ஓட்டேரி, வேலூர்.**

போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறம் மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே முதல் பரிச்சுத்தொகையாக ரூ.10,000/– இரண்டாம் பரிசுத்தொகையாக ரூ.7,000/– மூன்றாம் பரிசுத்தொகையாக ரூ.5,000/– மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் (அரசு / தனியார் / நிதியுதவி) 11 மற்றும் 12ம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர் மட்டுமே பங்கேற்க முடியும். ஒவ்வொரு போட்டிக்கும் (கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டி) ஒரு பள்ளியிலிருந்து ஒருவர் வீதம் மொத்தம் 3 மாணாக்கர்கள் மட்டுமே கலந்துக்கொள்ள வேண்டும். போட்டிகளுக்கான தலைப்புகள் பங்கேற்கும் மாணாக்கர்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்படமாட்டாது. நடுவர்கள் மற்றும் மாணாக்கர்கள் முன்னிலையில் போட்டி நடைபெறும் நேரத்தொடக்கத்தில் அறிவிக்கப்படும். மூன்று போட்டிகளும் ஒரே நாளில் நடத்தப்பெற்று முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும்.

எனவே, மேற்படி அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் (அரசு / தனியார் / நிதியுதவி) 11 மற்றும் 12ம் வகுப்புகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் இப்போட்டிகளில் கலந்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் இப்போட்டியில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் போட்டி நடைபெறும் அன்று ஒப்படைக்கவேண்டும் மற்றும் இணைக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என அனைத்து மேல்நிலைப் பள்ளி (அரசு / தனியார் / நிதியுதவி) தலைமையாசிரியர்கள் / தாளாளர்கள் / முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

பங்கு பெறும் மாணவர்கள் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Google Spreadsheet–ல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. போட்டியின் விதிமுறைகள்
2. படிவம்
3. google spreadsheet – https://docs.google.com/spreadsheets/d/1o5Jhfd9uYI9qkF6fTue9qpDQ2DJvC2BdbmlFMrOCH6A/edit?usp=sharing

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
தலைமையாசிரியர் / தாளாளர் / முதல்வர்கள்,
அனைத்து அரசு /நிதியுதவி / தனியார் மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர்,
   தமிழ் வளர்ச்சி துறை, மாவட்ட ஆட்சியர் வளாகம்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது. )
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

**11,12ஆம் வகுப்பு பயிலும் பள்ளி மாணவர்களிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகள் நடத்துவதற்கான விதிமுறைகள்**

1. போட்டிகள் 14.10.2025 அன்று வேலூர், முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி வளாகக் கூட்ட அரங்கில் முற்பகல் 9.30 மணி தொடங்கி நடத்தப்பெறும். போட்டி நாளன்று முற்பகல் 9.00 மணிக்குள் மாணாக்கர்கள் தங்கள் வருகையைப் பதிவு செய்திடல் வேண்டும்.

2. இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணாக்கர்கள் உரிய படிவத்தை நிறைவு செய்து தலைமையாசிரியரின் பரிந்துரையுடன் போட்டி தொடங்கும் முன்பு தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அவர்களிடம் அளித்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு பள்ளியிலிருந்து ஒருவர் வீதம் மொத்தம் 3 பேரை மட்டும் தெரிவு செய்து தலைமையாசிரியர் போட்டிகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4. ஒரு மாணவர் ஒரு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படும்.

5. இதற்கு முன்பு இப்போட்டிகளில் பங்கேற்று ஏதேனும் ஒரு போட்டியில் முதல் பரிசு பெற்றிருக்கும் மாணவர் / மாணவி மீண்டும் அதே போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்.

6. கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் முற்பகல் 09.30 மணி தொடங்கி நடைபெறும்.

7. மாவட்ட அளவிலான பரிசுத்தொகை

| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| கவிதைப்போட்டி – | ரூ.10,000/– | ரூ.7,000/– | ரூ.5,000/– |
| கட்டுரைப்போட்டி – | ரூ.10,000/– | ரூ.7,000/– | ரூ.5,000/– |
| பேச்சுப்போட்டி – | ரூ.10,000/– | ரூ.7,000/– | ரூ.5,000/– |

8. கவிதை, கட்டுரைப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு வெள்ளைத் தாள் வழங்கப்பெறும்.

9. **போட்டிகளுக்கானத் தலைப்புகள் பங்கேற்கும் மாணாக்கர்களுக்கு முன்னதாகவே தெரிவிக்கப்பட மாட்டாது. நடுவர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் போட்டி நடைபெறும் நேரத்தொடக்கத்தில் அறிவிக்கப்படும்.**

10. மூன்று போட்டிகளும் ஒரே நாளில் நடத்தப்பெற்று முடிவுகள் அன்றே அறிவிக்கப்படும்.

11. போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்குப் பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.

12. மாவட்ட அளவிலான போட்டிகளில் முதல் பரிசு பெற்ற மாணாக்கர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்கப் பரிந்துரைக்கப்படுவார்கள். மாநில அளவிலான போட்டிகள் பற்றிய விவரம் சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்குநரால் பின்னர் அறிவிக்கப்பெறும்.

13. மாநில அளவிலான பரிசுத்தொகை

| | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| கவிதைப்போட்டி – | ரூ.15,000/– | ரூ.12,000/– | ரூ.10,000/– |
| கட்டுரைப்போட்டி – | ரூ.15,000/– | ரூ.12,000/– | ரூ.10,000/– |
| பேச்சுப்போட்டி – | ரூ.15,000/– | ரூ.12,000/– | ரூ.10000/– |

தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்
வேலூர் மாவட்டம்

# தமிழ் வளர்ச்சித் துறை

## பங்கேற்பு படிவம்

1 மாணவரின் பெயர் (தமிழில்) :

2 தந்தை பெயர் :

3 பிறந்த நாள் / வயது :

4 பயிலும் பள்ளி/ முகவரி :

(தொலைபேசி எண்ணுடன்)

5 பயிலும் வகுப்பு :

6 இல்ல முகவரி / தொலைபேசி எண் :

7 மாணவரின் மாதிரி ஒப்பம் (தமிழில்) : 1.

2

பரிந்துரை

இப்பள்ளியில் பயிலும் செல்வன்/செல்வி ……………………………………………… தமிழ் வளர்ச்சித் துறையால் மாவட்ட அளவில் நடத்தப்பெறவுள்ள ………………………………………… போட்டியில் கலந்து கொள்ள பரிந்துரைக்கிறேன்.

நாள்:

போட்டி நடைபெறும் நாளன்று
மாணவரின் ஒப்பம் …………………………………………….

தலைமையாசிரியரின் ஒப்பம்
அலுவலக முத்திரை